# வாழ்வியல் திறன்களை மேம்படுத்தும் அறநூல்கள்

**முனைவர். வா. விஜயலட்சுமி**
தமிழ் உதவி பேராசிரியர்
தியாகராசர் கல்வியியல் கல்லூரி, மதுரை
**DOI:** https://www.doi.org/10.34293/eduspectra.v7i1.13

**முன்னுரை**

இக்கட்டுரையில் வாழ்வியில் திறன்களை மேம்படுத்தும் அறநூல்கள் பற்றி காண்போம் . தமிழ் இலக்கியங்களில் உள்ள அறநூல்களை முதலில் தெரிந்துக்கொள்வோம் .

**அறநூல்கள்**

- திருக்குறள்
- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னாநாற்பது
- இனியவைநாற்பது
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- ஆத்திசூடி, மூதுரை, நல்வழி, கொன்றைவேந்தன், நன்னெறி

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறநூல்கள் . இவை அக்காலப் பண்பாட்டை உருவாக்கப் பெரிதும் காரணமாயிருந்தன . மேற்கூறிய பதினொரு நூல்கள் தமிழரின் அறவாழ்வைக் காட்டுவன . இவை தவிர , பிற்காலத்தில் ஔவையார் , குமரகுருபரர், அதிவீரராம பாண்டியர், சுப்பிரமணிய பாரதியார் போன்ற புலவர் பெருமக்கள் நீதிநூல்களை இயற்றியுள்ளனர் .

சிறுவர்க்கெனவே ஆத்திசூடி , மூதுரை, நல்வழி, கொன்றைவேந்தன் (இயற்றியவர்: ஔவையார்), வெற்றிவேற்கை (இயற்றியவர்: அதிவீரராம பாண்டியன் ), நன்னெறி (இயற்றியவர்: சிவப்பிரகாசர்) போன்ற நீதிநூல்கள் எழுதப்பட்டன . சதகம் எனப்படும் நூறு பாடல்கள் கொண்ட நீதி நெறித் தொகுப்புகளும் தோன்றின.

மனிதனைப் பண்புள்ளவனாக ஆக்குவதற்கு அறநூல்கள் பயன்படுகின்றன . வாழ்க்கையில் கொள்ளத்தக்கன எவை , தள்ளத்தக்கன எவை என்று இந்நூல்கள் கற்பிக்கின்றன . நல்லது தீயதைப் பகுத்துக் கூறுகின்றன . அறநெறி நிற்பதால் வரும் பயன்களையும் , அறமல்லாத தீநெறிச் செல்வதால் விளையும் கேடுகளையும் அறநூல்கள் எடுத்துரைக்கின்றன .

**மூதுரை கூறும் கல்வியின் சிறப்பு**

''மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்மன்னனில் கற்றோன் சிறப்புடையன் – மன்னர்க்குத்தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோற்குச் சென்றஇடம் எல்லாம் சிறப்பு '' (முதுரை - பா-26)

மன்னனையும் மாசற கற்றவனையும் கசடறக் கற்ற புலவனையும் சீர்தூக்கிப் பார்த்தால் மன்னனைக் காட்டிலும் கற்றவன் சிற்றப்புடையவன் . ஆகிறான். ஏன் என்றால்மன்னனுக்கு அவனது

ஆட்சிக்கு உட்பட்ட நாட்டில் மட்டுமே மதிப்பு , சிறப்பு. கற்றவனுக்கோ அவன் சென்ற இடமெல்லாம் சிறப்பு. என்பதே இப்பாடலின் பொருள்



*"நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான்கற்றநூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு – மேலைத்தவத்து அளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்குலத்து அளவே ஆகுமாம் குணம் "*

**(பாடல் 7)**

. நீரில் அளவை பொறுத்தே பூ பூத்திருக்கும் நீர் உயர்ந்தால் பூ உயரும் . நீர் தாழ்ந்தால் பூ தாழும்..அதுபோல ஒருவரது அறிவு அவர் கற்ற நூலினது அளவனை பொருத்தே இருக்கும் . அதுபோல முந்தைய பிறவியில் எந்த அளவு நற்பணி செய்து தவப்பயன் பெற்றிருக்கிறார்களோ அந்த அளவு இந்தப் பிறவியில் செல்வத்தின் அளவு இருக்கும். குணம் பெற்றெடுத்த தாய் தந்தையரைப் பொருத்தே இருக்கும்



*"கற்கை நன்றே; கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே"*

யாசிப்பது மிக பெரிய குற்றமாகும் . ஆனால் வறிய நிலையில் இருந்தாலும் யாசித்தாவது கல்வியை கற்றிட வேண்டும் என்பதே இதன் பொருள்.

**புறநானூறு கூறும் கல்வியின் சிறப்பு**

"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!
பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,
'மூத்தோன் வருக' என்னாது, அவருள்
அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,

மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" [புறம் 183)

ஆசிரியருக்குத் துன்பம் நேரும்போது உதவ வேண்டும் . அவருக்கு நிறைந்த செல்வம் கொடுக்கவேண்டும். அவரைப் பின்பற்றி நடப்பதற்குத் தயங்கக் கூடாது . இப்படிக் கல்வி கற்பது முறையாகும். இது பெரிதும் நன்மை பயக்கும் . ஏனென்றால், தன் வயிற்றில் பிறந்த உடன்பிறப்புக் கொண்ட பலரில் சிறப்புப் பெற்றிருப்பவனிடம் தாயின் மனமும் திரிந்து செல்லும் . ஒரே குடியில் பிறந்த பலரில் மூத்தவனை வருக என அழைக்காமல் அவர்களில் அறிவுடையவன் வழியில் அரசாட்சியும் நடைபெறும். நான்கு பிரிவுகளில் கீழ்க்குலத்தில் பிறந்த ஒருவன் கற்றிருந்தால் மேல்குலத்தில் பிறந்தவனும் அவனிடம் அடக்கமாவான்.

**வெற்றிவேற்கைகூறும் கல்வியின் சிறப்பு**

''எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்அக்குடியில் கற்றோரை 'மேல்வருக' என்*பர்*'' ( பாடல் 37)

ஒருவன் எந்த குடியில் (தாழ்த்தப்பட்ட இனத்தில் ) பிறந்திருந்தாலும் அவன் கற்றவனாக இருந்தால் அவனை உயர் குடியில் வைத்து போற்றுவர்.

''கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்நெல்லினுள் பிறந்த பதர் ஆகும்மே ''
(பாடல் 36)

கல்வி அறிவு இல்லாதவன் எதற்கும் பயன்அற்றவன் . அவன் தனது குலத்தின் பெருமையைக் கற்றவர்களிடம் பேசுவதால் அவனுக்குப் பெருமை வந்து சேராது . இதை உணராமல் கல்லாத ஒருவன் தனது குலப்பெருமையைப் பேசினால் அவன் 'பதர்' ஆகக் கருதப்படுவான்

நெல்லின் உள்ளே அரிசி இருந்தால் அதை நெல்மணி அல்லது நெல் என்று கூறுவோம் . அரிசி இல்லாமல் உமியால் மட்டும் மூடப்பட்டு இருக்கும் நெல்லைப் பதர் என்று கூறுவார்கள் . அரிசி இல்லாமல் வெறும் உமிமட்டும் இருக்கும் பதர் , உணவுக்குப் பயன்படாது. அதைப்போல, கல்வி அறிவு இல்லாதவனும் பயன்படமாட்டான் என்பது இத்தொடரின் பொருள் . இவ்வாறு கல்வியறிவு இல்லாமல் பிறருக்குப் பயன்படாமல் இருப்பவன் , கற்றவர்களிடம் தன் குலத்தை உயர்த்திப் பேசுவது நெல் போன்றே காட்சி தரும் பதருக்கு இணையானது என்று அதிவீரராம பாண்டியன் கூறியுள்ளார்.

**இனியவை நாற்பது கூறும் கல்வியின் சிறப்பு**

''பிச்சைபுக் காயினும் கற்றல் மிகஇனிதே''
''நற்சவையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே''
''முத்தேர் முறுவலார் சொல்லினிது ஆங்கினிதேதெற்றவும் மேலாயார்ச் , சேர்வு''
''கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே''
''மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே''
''எள்துணை யானும் இரவாது தான்ஈதல்எத்துணையும் ஆற்ற இனிது''
''கற்றறிந்தார் கூறும் கருமப் பொருள் இனிதே''
''பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன் இனிதே''
''தெற்றென இன்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்பத்திமையின் பாங்கினிய தில்''

**நல்வழியும் மூதுரையும்கூறும் அறம்**

*நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்கநல்லார்சொல் கேட்பதுவும் நன்றே -
நல்லார்குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடுஇணங்கி இருப்பதுவும் நன்று.**(பாடல் 7)**

*தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்றதீயார்சொல் கேட்பதுவும் தீதே - *தீயார்*
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு இணங்கி இருப்பதுவும் தீது. (மூதுரை) **(பாடல் 8)**

இழுக்குடைய பாட்டிற் (கு) இசைநன்றுசாலும்ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று – வழுக்குடையவீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத்தாரத்தின் நன்று தனி

**நறுந்தொகை கூறும் அறத்தின் அழகு**

"கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்
செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்
வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்
மன்னர்க்கு அழகு செங்கோல் முறைமை
வணிகர்க்கு அழகு வரும்பொருள் ஈட்டல்
உழவர்க்கு அழகு உழுதூண் விரும்பல்
மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல்
தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை
உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்
பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாது இருத்தல்
குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல்
விலைமகட்கு அழகு தன் மேனி மினுக்குதல்
அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல்
வறிஞர்க்கு அழகு வறுமையில் செழுமை(பாடல் 1முதல் 10)

**முடிவுரை**

இக்கட்டுரையில் அற நூல்களில் உள்ள மூதுரை , புறநானூறு, இனியவை நாற்பது , நல்வழி, வெற்றிவேற்கை போன்ற சில நூல்களில் இருந்து கல்வியின் அவசியத்தையும் அதன் சிறப்பையும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.